**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– 0 முதல் 6 வயது வரை உள்ள மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான 32 நடமாடும் சிகிச்சை பிரிவுகள்– 2016–2017 ஆம் ஆண்டிற்கான திட்டத் தொடராணை மற்றும் தொடர் செலவினத்திற்கு நிதி ஒப்பளிப்பு செய்தல்– ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண். 64

நாள்: 15–09–2016
துன்முகி, ஆவணி 30,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:

1. அரசாணை(1டி) எண்.26, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04–09–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.2013/இவாததி/2016, நாள் 28.04.2016.

----------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கென 32 மாவட்டங்களில், 2015–2016 ஆம் நிதியாண்டில் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக, ரூ.82,28,000/– நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2016–17 ஆம் நிதியாண்டிற்கான இத்திட்டத்தினை தொடர திட்டத் தொடராணையும் மேலும் நடமாடும் சிகிச்சைப் பிரிவு வாகனங்கள் தொடர்ந்து செயல்படுத்திடவும், ஓட்டுநர் மற்றும் உதவியாளர்களுக்கு ஏப்ரல் 2016–ல் இருந்து ஊதியம் வழங்க வேண்டியுள்ளதாலும் கீழ்கண்டவாறு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்:-

| **வ.எண்.** | **விவரம்** | **தொகை ரூ.** |
|---|---|---|
| 1. | ஊர்தி ஓட்டுநருக்கான தொகுப்பூதியம் ரூ.8,000/– x 12 மாதங்கள் | ரூ.96,000/– |
| 2. | ஊர்தி உதவியாளர்களுக்கான தொகுப்பூதியம் ரூ.5,000/– x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு சாதனங்கள் செலவினம் ரூ.27,125/– வீதம் ஒரு மாவட்டத்திற்கு | ரூ.27,125/– |
| 4. | எரிபொருள் செலவினம் + பராமரிப்பு செலவினம் ரூ.10,000/– x 12 மாதங்கள் | ரூ.1,20,000/– |
| | மொத்தம் (ஒரு மாவட்டத்திற்கு) | ரூ.3,03,125/– |
| | **32 மாவட்டங்கள் x ரூ.3,03,125/–** | **ரூ.97,00,000/–** |

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, 0–6 வயது வரை உள்ள மாற்றுத் திறன் படைத்த குழந்தைகளுக்கென 32 மாவட்டங்களில், 2016–2017ஆம் நிதியாண்டில் நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள் தொடர்ந்து செயல்பட ஏதுவாக, திட்டத் தொடராணையும் கீழ் கண்டுள்ளவாறு ரூ.97,00,000/–(ரூபாய் தொண்ணூற்று ஏழு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும், இச்செலவினத்தை மேற்கொள்ள, மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | ஊர்தி ஓட்டுநருக்கான தொகுப்பூதியம் ரூ.8,000/– x 12 மாதங்கள் | ரூ.96,000/– |
| 2. | ஊர்தி உதவியாளர்களுக்கான தொகுப்பூதியம் ரூ.5,000/– x 12 மாதங்கள் | ரூ.60,000/– |
| 3. | விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு சாதனங்கள் செலவினம்ரூ.27,125/– வீதம் ஒரு மாவட்டத்திற்கு | ரூ.27,125/– |
| 4. | எரிபொருள் செலவினம் + பராமரிப்பு செலவினம் ரூ.10,000/– x 12 மாதங்கள் | ரூ.1,20,000/– |
| | மொத்தம் (ஒரு மாவட்டத்திற்கு) | ரூ.3,03,125/– |
| | **32 மாவட்டங்கள் x ரூ.3,03,125/–** | **ரூ.97,00,000/–** |

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும்–02 சமூக நலன்–101 மாற்றுத் திறனாளிகள் நலன்–பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–MV மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான நடமாடும் சிகிச்சைப் பிரிவுகள்–

| | |
|---|---|
| 08– விளம்பரமும் பிரச்சாரமும் 01 விளம்பரக் கட்டணங்கள் (2235 02 101 MV 0816) | ரூ.8,68,000/– |
| 45– பெட்ரோலியம், எண்ணெய் மற்றும் மசகெண்ணெய் (2235 02 101 MV4509) | ரூ.38,40,000/– |
| 33– தொழில் முறை, சிறப்புப் பணிகளுக்குத் தொகை கொடுத்தல் 04 தொகுப்பூதியம் (ஊர்தி ஓட்டுநர் மற்றும் ஊர்தி உதவியாளர்) (2235 02 101 MV 3340) | ரூ.49,92,000/– |
| மொத்தம் | ரூ.97,00,000/– |

5. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையில் விளம்பரக் கட்டணங்கள் தொடர்பாக கூடுதலாக தேவைப்படும் ரூ.2,45,794/– 2016–17–ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இந்நிதியொதுக்கீடு செய்யப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. இச்செலவினத்தை 2016–17–ம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான கருத்துருவையும் தவறாமல் நிதித் துறைக்கு உரிய நேரத்தில் அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**6.** அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 04–09–2015ல், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாமல் பின்பற்றப்பட வேண்டும் என மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.45979/நிதி(சந)/2016, நாள் 08.09.2016–ன் இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.803 (எண்ணூற்று மூன்று) உடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர்,சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

**நகல்:–**
நிதி (சந/வ.செ.பொ.II)த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.